ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

**कामं क्रोधं लोभं मोहं त्यक्त्वात्मानं भावय कोऽहम् ।**
**आत्मज्ञानविमूढास्ते पच्यन्ते नरकनिगूढाः ॥**

कामं - ஆசையையும்
क्रोधं - கோபத்தையும்
लोभं - பிறர் பொருளிலுள்ள விருப்பத்தையும்
मोहं - அவிவேகத்தையும்
त्यक्त्वा - விட்டுவிட்டு
अहं - நான்
कः - யார் என்று
आत्मानं - ஆத்மஸ்வரூபத்தை
भावय - சிந்தனைசெய்
आत्मज्ञानविमूढाः - எவர்கள் ஆத்மஞானமில்லாதவர்களோ
ते - அவர்கள்
नरकनिगूढाः - நரகத்தில் விழுந்தவர்களாய்க்கொண்டு
पच्यन्ते - தாபத்தையடையும்படி செய்யப்படுகிறார்கள்.

கொடிய நரக துக்கத்தை அனுபவிக்க முக்கிய காரணங்களாயிருக்கும் அக்ஞானம் அதன் கார்யங்கள் முதலானவைகளை விலக்கி ஆத்மஸ்வரூப விசாரணை செய்து அதன் தத்வத்தை யறியவேண்டியது முக்கியமென்று போதிக்கப்படுகிறது

அக்ஞானத்தின் காரியங்களான காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் முதலான கெட்டகுணங்களை அறவே ஒழித்து நான் நான் என்று வியவகரிக்கப்படும் பதத்தின் பொருள் யாது? உலகில் இப்பதத்தைப் பிரயோகிக்காதவர்களில்லை. ஆனாலும் அதன் உண்மையான கருத்தை யறியாமல் ஸ்தூல சரீரத்திலும் மற்றும் சில ஜடபதார்த்தங்களிலும் அப்பதத்தை உபயோகிக்கிறார்கள். அது தவறேயாகும். அதை விட்டு ஆத்மஸ்வரூபத்தை நன்றாய் விசாரித்து அதன்பொருளை அறிந்துகொள்ளவேண்டும். எதற்காக அறியவேண்டுமென்றால் ஸம்ஸாரத்திலுழன்று அதிகமான பாவங்களைச் செய்து நரகதுக்கங்களை அனுபவிக்காமல் இருக்கவேண்டுமென்கிற எண்ணமிருப்பின் ஆத்மவிசாரம் செய்து அதன் ஸ்வரூபத்தை நன்கறிந்தால் தான் முடியும். இல்லாவிடில் இல்லை. ஆகையால் நித்யமான மோக்ஷஸுகத்தை அடையவேண்டுமானால் ஆத்ம விசாரம் செய்தே தீரவேண்டும்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
க்ஷயவரூ கார்த்திகை-மீ உசவ

# விதவாவிவாக கண்டனம்.

பால்யவிதவைகளுக்கு மறுமணம் செய்வது சாஸ்திரப்படி
சரியல்லவென்று ஒருவர் வினவியதற்கு
காந்திகூறும் மறுமொழி சரியல்ல.

---

நவம்பர் மீ 16வ மித்திரனில் மகாத்மா காந்தி யங் இந்தியா பத்திரிகையில் எழுதுவதாவது—

பால்ய விதவைகளின் புனர்விவாகத்தைப்பற்றி எனக்கு வந்திருக்கும் ஒரு கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது— செப்டம்பர் மீ 23வ பத்திரிகையில் தாங்கள் ஒரு நிருபருக்கு எழுதியிருக்கும் பதிலில் பால்ய விதவைகளைப் பெற்றோர்கள் புனர் விவாகம் செய்துகொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள். சாஸ்திரப்படி கன்னிகாதானம் செய்துகொடுக்கும் பெற்றோர்கள் எவ்வாறு இப்படிச் செய்யமுடியும்? பெண்ணின் மீது தங்களுக்குள்ள எல்லா பாத்தியங்களையும் மாப்பிள்ளைக்கு அக்னி சாக்ஷியாக தானம் செய்துவிட்ட பெற்றோர்கள் மாப்பிள்ளை இறந்தபின் ஒருவித பாத்தியமும் கொண்டாட முடியாது. அதே காரணத்திற்காக அந்தப்பெண்ணும் புனர் விவாகம் செய்து கொள்ளு உரிமை பெற்றிருக்கவில்லை. ஆகையால் தனது கணவன் இறக்கும் போது பிரத்தியேகமாக அமைதி கொடுத்தாலொழிய அவள் புனர் விவாகம் செய்துகொள்வது இறந்துபோன கணவனுக்குத் துரோகம் செய்வதாகு என்று கூறி, பின்னும் சில வார்த்தைகளால் விதவாவிவாகத்தை அங்கீகரிப்பது சரியல்லவென்று தோன்கிறதேஎன்று ஒருவன் வினவியதற்கு,

## காந்தி கூறும் மறு மொழிகள்.

1. இக்கமாதிரி வாதிப்பது உயர்ந்த லக்ஷ்யத்தைத் துஷ்பிரயோகம் செய்வதாகுமென்று நான் கருதுகிறேன் என்று காந்தி சொல்லுகிறார். இது சரியல்ல.

சுருதி ஸ்மிருதி முதலிய மேற்கோளைக் காட்டி ஒருவர் விதவாவிவாகம் செய்வது சரியல்லவென்று கூறினால் அதற்குச் சரியான ஆதாரங்களைக்காட்டி துஷ்ப்பிரயோகம் என்று சொன்னால் யாரும் உசிதமென்று அங்கீகரிப்பார். அவ்விதமின்றி துஷ்ப்பிரயோகமென்று நான் கருதுகிறேன் என்று சொன்னால் அதன் கருத்து எனக்கு நன்றாய்ப் புலப்படவில்லை. மனு யாக்ஞவல்க்யர், பராசரர், வஸிஷ்டர் முதலிய மகரிஷிகளைப்போல் இவரையும் கலிகாலஸ்மிருதிகர்த்தாவாகக் கருதி இவர் சொல்லுவதை எல்லாம் ஸ்மிருதி வசனங்களாகக் கொள்ளவேண்டுமென்று இவ்விதம் கூறுகிறார்போலும் தோன்றுகிறது. சாஸ்திரப் பிரமாணங்களையே முக்கியமாகக் கொண்டு, அனுஷ்டிக்கவேண்டிய வைதிக கர்மாக்களை அவைகளின் அபிப்பிராயங்களைச் சற்றும் உற்றுநோக்காமல் தமக்குத் தோன்றியதே சாஸ்திரார்த்தமென்று வெளியிட்டுப் பிறரை நிந்திக்க முன்வருவது ஆஸ்திகர்களுக்கழகல்ல. ஆகையால் இங்கு இவர் கூறியது உசிதமில்லை.

2. சிறு குழந்தைகளைக் கன்னிகாதானம் செய்து கொடுப்பதென்பதில் அர்த்தமேயில்லை. குழந்தைகள் தகப்பனாரின் சொத்தைப் போன்றவையா? அவர்களை அவர் பாதுகாப்பவரே ஒழிய சொந்தக்காரரல்ல. அவரிடம் பாதுகாப்பிற்காக ஒப்புவிக்கப்பட்டிருக்கும் மைனரின் ஸ்வேச்சையை அவர் பிறரிடம் ஒப்புவிப்பதால் காப்பாளர் என்கிற உரிமையையும் இழந்து விடுகிறார் என்று கூறியிருக்கிறார்.

சிறு குழந்தைகளைக் கன்னிகாதானம் செய்துகொடுப்பதென்பதில் அர்த்தமே இல்லை என்கிறார். என் இல்லை. சாஸ்திர ஸம்மதி இல்லையா? சிஷ்டாசாரமில்லையா? அல்லது காந்தி மனத்திற்குப் பொருளில்லாததாகத் தோன்றுகிறதா?

स्त्रीणां उपनयस्थाने विवाहं मनुरब्रवीत् ।
तस्मात् गर्भाष्टमः श्रेष्ठः जन्मतो वाष्टवत्सरः ।
कन्यां ददत् ब्रह्मलोकं रौरवं तु रजस्वलाम् ॥

புருஷர்களுக்கு அவசியம் நடத்தவேண்டிய உபநயனம் என்கிற கர்ம்மாவைப் போல் ஸ்திரீகளுக்கு விவாக கர்மாவென்று மநு செப்புகிறூர். ஆகையால் கர்ப்பாஷ்டமம் அதாவது 7 ஆவது ஆண்டு அல்லது எட்டாவது ஆண்டு, இந்தக்காலமே ஸ்திரீகளின் விவாக கர்ம்மாவிற்கு மிகவும் சிறந்தகாலம் என்று ஒரு ஸ்மிருதியிலும் கன்யாப்பருவத்தில் இருக்கும் அதாவது 10 வயதிற்கு மேல்படாமலிருக்கும் ஸ்திரீயை விவாகம் செய்துகொடுத்தால் தானம் செய்துகொடுத்த பிதாமுதலியோர்கள் பிர்மலோகத்தையடைகிறூர்கள். ருதுவான பிறகு மணம் செய்துகொடுத்தால் ரௌரவம் என்கிற குரூரமான நரகத்தையடைகிறூர்கள் என்று மற்றொரு ஸ்மிருதியிலும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பலமஹரிஷிகளும் கூறியிருக்கின்றூர்கள். ஆகையால் தம் புத்திரியை 8 வது வயதிலோ அல்லது 10 ஆவது ஆண்டிலோ பிதாவாயிருப்பவர்கள் விதிப்படி விவாகம் செய்து கொடுப்பது சாஸ்திரஸம்பந்தமில்லையென்றுசொல்வது மிகவும்ஸாஹஸமாகுமேயல்லாமல் ஒரு காலும் பொருந்தாது. சிஷ்டாசாரமில்லை என்று ஸாதிக்க முன்வருவதும் தவறேயாகும். சுமார் 40 வருஷங்களுக்கு முன் முக்கியமாய் நம் தேசத்திலுள்ள பிராமண குலங்களிலும் மற்றும் சில ஜாதிகளிலும் 10 வயதிற்குள்ளாகவேதான் விவாகம் நடைபெற்று வந்தது. இப்பவும் 70,80 வயது சென்ற பெரியார்களைக் கேட்டால் இதன் உண்மையை நன்கு அறிந்து கொள்ளலாம். இக்காலத்திலும் பலர் நடத்துகிறூர்கள். கலியின் தோஷத்தால் தற்காலம் அந்த நியமத்தைச் சிலர் மாற்றுகிறூர்களே தவிற இக்காலத்தில் அவ்விதம்நடைபெறவில்லை என்று கூறவியலாது. ஆகையால் அநுஷ்டானத்திலும் நன்கு நடைபெறுகிறதென்று தான் தெரிகின்றது. இவ்விதமிருப்பினும் மூன்றாவது வினவாகக் கூறப்பட்ட காந்தி மனத்திற்கு அர்த்தமில்லாமல் தோன்றினுல் என் செய்கிறதென ஓர் சங்கை நிகழலாம். இச்சங்கை அஜ்ஞர்களுக்குத் தோன்றுமேயல்லாமல்

அறிஞர்களுக்குதிக்காது. சாஸ்திரங்களையும் அவைகளைக் கசடறக் கற்றறிந்த கல்விமான்களுடைய அனுஷ்டானங்களையும் கைவிடாமல் மேற்கோளாகக் கொண்டு ஒரு விஷயத்தைத் தீர்மானிக்க முன்வந்து தம் அபிப்பிராயத்தையும் எடுத்துக் காட்டினுல் யாரும் அங்கீகரிக்க ஆக்ஷேபமிராது. அஃதின்றி சாஸ்திராசாரங்களுக்கு முறணுகத் தோன்றியபடியெல்லாம் தர்ம்ம வியவஸ்தை செய்ய ஒருவர் முன்வந்து அபிப்பிராயம் கொடுத்தால் எந்தப் பண்டிதர்கள் தான் அதை அங்கீகரிப்பார்கள். லோக க்ஷேமார்த்தமாய் அது எப்படியாகும். அவரவரும் தம் வீட்டிற்குள்ளிருந்து கொண்டு தோன்றியதையெல்லாம் தர்மோபதேசமாகச் சொல்லிக்கொண்டிருக்கலாம். மற்றவர்களுக்கும் அது எப்படி உசிதமாகத் தோன்றும். ஆகையால் கன்னிகாதானம் செய்துகொடுப்பதென்பதில் அர்த்தமில்லை என்கிற வாக்கியம் தான் அர்த்தமில்லாத வார்த்தை என்று ஏற்பட்டது.

முடிவிலும் இம்மாதிரி விவாகங்கள் செல்லுபடியற்றவைகளென்று கூறப்பட்டுவிடவேண்டுமென்றும், முடிவுரையாக எழுதியிருக்கின்றூர். தமக்கு எந்தெந்த காரியங்களில் எவ்வளவு வரையில் பேச அதிகாரமுண்டு. எதற்குமேல் அதிகாரமில்லை என்பதை அற்பங்கூட அறியாமல் செல்லுபடியற்றவை என்று கூறப்படவேண்டுமென்கிறூர். சாஸ்திரங்கள் செல்லுபடியாகுமென்று ஸ்பஷ்டமாய் கர்ஜிக்கும்பொழுது செல்லுபடியாகாதென்று இவர் சொல்லும் வசனத்திற்கு எந்த ஆஸ்திகர் செவிசாய்ப்பார். வீணில் இந்தக் கார்யத்தில் சிரமத்தை எடுத்துக்கொண்டு பாபத்தையும் ஸம்பாதித்து ஆஸ்திகர்களின் மனத்திற்கும் அதிக கஷ்டத்தை விளைவிக்கிறூர். இவருக்கிருக்கும் பெருமைக்கு இது அற்பங்கூட அழகாகத் தோன்றவில்லை. எங்கும் நிறைந்து பரஞ்சோதி ஸ்வரூபமாய் விளங்கும் ஸ்ரீ பரமேசுவரனை இவருக்கு நற்புத்தி புகட்டவேண்டுமாய்ப் ப்ரார்த்தித்து இவ்விஷயத்தையும் முடித்துக்கொள்கிறேன். சுபம்.

உபபத்திராதிபர்.

(விஷயதானம் செய்வோர்களின் அபிப்பிராயம் பத்திராதிபர்களைச் சாரமாட்டா,)

## மஹோதய புண்யகாலம்.

वैद्यनाथदीक्षितीयश्राद्धकाण्डे अमायां योगविशेषप्रकरणे भारते (श्लो) अमार्कपातश्रवणैर्युक्ता चेत् पुष्यमाघयोः । अर्धोदयस्स विज्ञेयः कोटिसूर्यग्रहैस्समः ॥ सौम्यवारेण योगोऽयं महोदय इति स्मृतः । अर्कः (भानुवारः) आदित्यवारः, पातः व्यतीपातः इति ।

என்றதனால் (पुष्य) தை மாஸத்திலோ (माघ) மாசி மாஸத்திலோ அமாவாஸ்யை (अर्क) பானுவாரம் (पात) வியதீபாதம் (श्रवण) திருவோணநக்ஷத்திரம் இவைகளுடன் கூடினால் கோடிஸூர்ய கிருஹணத்திற்குத்துல்யமான அர்த்தோதய புண்யகாலமென்றும், (सौम्य) புதவாரத்தில் முன்சொல்லிய அமாவாஸ்யை வியதீபாதம் சிரவணம் கூடினால் மஹோதயமென்றும், இவ்விதமே

संग्रहे- पातस्यान्तःपूर्वपादस्त्वमायाश्श्रोणामध्यं भास्करस्योदयश्च।भानोर्वारे त्वेषचार्धोदयस्स्यात् सौम्येवारे तंमहापूर्वमाहुः॥ एषः भानुवारः अमावास्यातिथिर्वा न तु भास्करोदयमात्रं पूर्वोक्तभारत वचनात् भास्करोदयसमये एतादृशयोगश्चेत् विशेषः, उदयानन्तर ममाचेदपि भारतवचनानुरोधेन योगे अर्द्धोदयएव इति ॥

என்றதனால் முன்போல் பானுவாரத்தன்று பகலில் அதாவது ஸூர்யோதயகாலத்திலோ, உதயத்திற்குப்பிறகோ, முன்காட்டிய அமா பாத சிரவண யோகங்கள்சேர்ந்தால் அர்த்தோதயமென்றும் இதே யோகங்கள் (सौम्य) புதவாரத்துடன் சேர்ந்தால் மஹோதய புண்யகாலமென்றும், இவ்விதமே

अप्पादीक्षितीयाचारसार नवनीतेऽपि (श्लो) अमार्कपात-श्रवणैर्युक्ता चेत् पुष्यमाघयोः । अर्द्धोदयस्स विज्ञेयः कोटिसूर्यग्रहोपमः ॥ बुधवारेण योगोऽयं महोदय इति स्मृतः ॥

२. पातस्यान्तः पूर्वभागस्त्वमायाश्रोणामध्यं भास्करस्योदयश्च । भानोर्वारे पुण्यमर्धोदयस्स्यात् चान्द्रेर्वारे तं महापूर्वमाहुः ॥ चान्द्रिः बुधइत्यर्थः भास्करोदयशब्देन अह्न्येव यदा कदा वा संभवेऽपीत्यर्थः न तु रात्रावपि ग्रहणादिवदस्य योग पुण्यकालत्वं अर्धोदयमहोदययोरिति च ॥ तथैव स्मृतिकौस्तुभेऽपि अमा........ दिवैवयोगश्शस्तोऽयं न तु रात्रौ कदाचन इति ॥

என்றதனுல் முன்காட்டிய யோகங்கள் பானுவாரத்தன்று பகலில் நேர்ந்தால் அர்த்தோதயமென்றும், இதே யோகங்கள் புத சாந்த்ரி வாரத்தன்று நேர்ந்தால் மஹோதயமென்றும்மூலஸ்மிருத்தியாதி வசனங்களாலும் ஷை வியாக்யான வசனங்களாலும் புதவாரத்தன்றுதான் மஹோதயமென்று நிர்ணயிக்கப்படுகின்றது. இவ்விதப் பிரமாண வசனங்கள் இருக்க இந்துவாரத்துடன் முன் காட்டிய யோகங்கள் கூடினுல் மஹோதய புண்யகாலமென்று பஞ்சாங்கங்களில் எழுதியிருப்பதை தவிர, வேறு, மூலப்பிரமாண வசனங்கள் கிடைக்கவில்லே. ஆகையால் அவைகள் கிடைக்கிற வரை இதுமுதல் எந்தக்காலங்களில் அமாவாஸ்யை முதலியவைகள் புதவாரத்துடன் கூடுகின்றதோ அக்காலங்களில் மஹோதய புண்ய காலமென்று அறிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் நாளது 1927௵ பிப்ரவரி௴ 2 தேதிக்கு கொல்லம் 1102௵ க்ஷயவருஷம் தை௴ 20௳ புதவாரத்தன்று பகலில் அமாவாஸ்யை 19—23 திருவோண நக்ஷத்திரம் 34—5 வியதீபாதம் 46—53 இவ்விதம் முன் சொல்லிய யோகங்கள் சாஸ்திரபிரமாண வசனப்படி கூடுவதால் ஷை மஹோதய புண்யகாலம் ஏற்படுகின்றன. அநேகர்கள் வாக்யத்தின் அர்த்தத்தை பர்யாலோசனம் செய்யாமல் அந்தபரம்பரா நியாயமாய் திங்கள் கிழமையுடன் ஷை யோகங்கள் சேர்ந்தால்த்தான் மஹோதய புண்யகாலமென்று மோஹ

த்தால் பஞ்சாங்கங்களிலும் அவ்விதமே போட்டிருப்பதையும் பார்த்து மோசம்போனூர்கள்மேலும்நாளதுவருஷமுதல்முன்சொல்லியபடி மேல்ஸம்பவிககிற வருஷஙகளிலும் கவனிததுபார்த்துக் கொண்டு புதவாரத்தன்று,பஞ்சாங்கங்களில் தெரியாத்தனத்தால் புண்யகாலம் போட தவரிவிட்டுபோயிருந்தபோதிலும்கூட, அக்காலங்களில் புண்யகர்மாக்களான ஸ்நாநதான பிதுரு சிரார்த்த தர்பணுதிகளை அநுஷ்டிக்க வேண்டும்.

நாளது க்ஷய என்னும் அக்ஷயவூ தைமீ 20 தேதி புத வாரத்தன்று மஹோதய புண்யகாலம ஸம்பவிக்கிறதென்பதை ஆஸ்திகர்களான ஸகல மஹாஜனங்களுக்கும தெரிவித்து கொள்கிறேன். இதில் இந்துவாரத்தில்த்தான மஹோதய புண்யகாலம் புதவாரத்தில் அது கிடையாது என்பதற்கும் ஆசாரபிரமஹாஸ்திரபிரயோகம் தவிர மூலஸ்மிருத்தியாதி பிரத்தியக்ஷவசன பிரமாணங்கள் இருக்கும் பக்ஷத்தில் அவைகளை கேவலயுக்திவாத மன்னியில் வித்வான்களான பெரியோர்கள் ஆர்யதர்ம பத்திரிகாதுவாரா பிரகடனம் செய்து அநுக்ரஹிக்க பிரார்த்திக்கிறேன்.

கிருஷ்ணுபுரம், சிவஸ்வாமி தீக்ஷிதர்,

மதுரை.

---

வாழ்க வந்தணர் வானவ ராணினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

---

### காதம்பரேச்வரர் (கடம்பர் கோயில்)

வேதங்கட்குக் காஞ்சியின்கண் ஏகாம்பரநாதர் "நாம் எவ்வெவ்விடத்தில் எவ்வெக்கோலங்கள் கொள்ளுகின்றேமோ அவ்வக் கோலங்கட்கேற்றவாறு உங்களைக் கொள்கின்றேம்" என்று அனுக்கிரகம் செய்தபடியே தாருகாவனத்தில் பிக்ஷாடனக்கோலங்கொண்ட காலத்தில் அவ் வேதங்களைக் கோவணமாகக்கொண்டனராதலால் வேதங்கள் அக்கருணையை நாடிப்பூஜித்தன. சேயாற்றுக்குத் தென்கரை.

### அத்யாபகேச்வரர் * திருவோத்தூர்.

வேதார்த்தவுண்மைகளை ஓர் காலத்தில் சைவவேதியராகிய சிவபரஞ்சுடர் தேவர்களுக்கும் வைதிக சைவானுஷ்டானத்திற் சிறந்த மகருஷிகளுக்கும் அத்தியயன பூர்வகமாய் ஓதியருளினர். இந்த க்ஷேத்திரம் சேயாற்றுக்கு வடகரை. திருஞான சம்பந்தப் பெருமாள் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய க்ஷேத்திரம்.

### குரங்கணீச்வரர் * குரங்கணிமுட்டம்.

ஸ்கந்த பத்தினியாகிய வள்ளியம்மையின்மாதாவாகிய மானுருவுகொண்ட லக்ஷ்மியினலும், சிவயோகியாய் வந்த விஷ்ணுமூர்த்தியினலும், பிரமனலும், இந்திரனலும், நாரதமுனிவராலும் ஹனுமாராலும் சிக்ரோடமுனிவராலும் காக்கையாய்வந்த யமனலும் பூஜிக்கப்பட்டவர். இயமனல் உண்டாக்கப்பட்ட யமதீர்த்தம் ஒன்றுண்டு.

வ்ருஷபேச்வரர் திரிபுரதகன காலத்தில் வ்ருஷபமாய்த் தாங்கிய திருமாலாலும், சுப்பிரமணியக்கடவுளாலும், நந்திதேவராலும், காளியினலும், அனேக அசுரர்களாலும் பூஜிக்கப்பட்டவர்.

### ஜீவத்பாகேச்வரர் (வ்ருஷபேச்வாருக்கு வாயுமூலையில்)

இலக்ஷ்மிநாதராகியவிஷ்ணுமூர்த்தியினல் பூஜிக்கப்பட்டவர்.

### தாளிவனேச்வரர் * (திருப்பனங்காடு)

அகஸ்தியரால் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம் ஜடாகங்கை.

கிருபாநாதேச்வரர் புலஸ்தியரால் பூஜிக்கப்பட்டவர். இவ்விரண்டு லிங்கமூர்த்திகளும் ஒன்றாகவுள்ளன.

## திருப்பக்குழி.

### வராஹேச்வரர் (பெரியகாஞ்சிபுரத்துக்குமேற்கு)

வராக அவதாரங்கொண்ட திருமால் பூமியைப்பாயாய்ச் சுருட்டிக்கொண்டுபோன ஹிரண்யாக்ஷனைக்கொன்று பூமியை முன்போல் நிலைநிறுத்திப்பின்னர் இச்செயலைச் செய்யவல்ல கடவுளார் நம்மைப்போல் எவரிருக்கின்றனர் என்று இருமாப்படைந்தகாலத்தில் அச்செயலேயன்றி இவ்விறுமாப்புச்செயலையும் அடக்கவல்லோனாகிய யானொருவனிருக்கின்றேன். என்னை மறந்தனையோவென்று சிவபரஞ்சுடர் வேடுருக்கொண்டு வந்து திருமாலாகிய அவ்வராகத்தின் கொம்பைப்பிடுங்கி மார்பிலணிந்துகொள்ளவே செருக்கொழிந்து மனம் தெளிந்து "ஓ, ஈசனே, இதற்கு யான் செய்யும் கைம்மாறு யாது" என்று காஞ்சி எல்லையிலுள்ள திருப்பூக்குழியில் பூஜித்தனர். அச்சிவார்ச்சனைக்கு ஓர் குண்டமொன்றெடுத்து அதில் நீலோத்பலம் முதலிய நீர்ப்பூக்களை யுண்டாக்கி அதனைச்சிறப்பித்தனராதலால் அவ்வூர் திருப்பூக்குழி என பெயர்பெற்று திருப்பக்குழி என வழங்குகின்றது.

### சுயம்புவேச்வரர் (ஷை வராஹேச்வரருக்குக்கிழக்கு)

ஜடாயுவானவன் உத்தமமாகிய மோக்ஷகதி வேண்டுமென்றெண்ணித்தன் பெயரால் சுயம்புவேச்வரரைத் தன்பெயர் விளங்கச் ஜடாயுலிங்கம் என்று பிரதிஷ்டைசெய்து பூஜித்தனன். ஜடாயு தீர்த்தமென்று தீர்த்தமும் உண்டாக்கினன்.

வாணேச்வரர் வாணாசுரன் தனக்குண்டாகிய தோள்தினவை சிவபரஞ்சுடரோடு மல்யுத்தம் செய்து போக்கிக் கொள்ள வெண்ணிக்கேட்ட குற்றம் நீங்கப் பூஜித்த பெருமானார்.

### அந்தகேச்வரர் (வராஹேச்வரருக்குக்கிழக்கு)

அந்தகாசுரன் திருமால் முதலிய தேவர்களை யெல்லாம் எதிர்த்துப்போர் புரியும் காலத்தில் அவரெல்லாம் அவனோடு போர் செய்ய முடியாது பெண்வடிவம் கொண்டு எங்கெங்கும் ஓடினர், அங்கங்கும் அவ்வந்தகன் விடாது பின்சென்று பல துன்பங்களைச் செய்யப் பின்னர் அவரெல்லாம் கைலாஸத்திற்குப்போய் உமாதேவியாரது தோழியர்களாகிய சக்தி கூட்டங்களோடு கலந்து

அவர்களோடு கூடியிருந்தனர். அதுகண்ட அந்தகன் அவர்களோடு போர் செய்தற்குகூடாமல் சென்று சில நாட்கழித்து கைலாஸத்தில் போர் செய்யவந்தனன் அவனது அகங்காரத்தைக் கைலாஸநாதர் கண்டு வைரவக்கடவுளையழைத்து "இவனைபடக்கி வருவாய்" என்று கட்டளையிட அவர் அவனை அதிக சுலபமாய்ச் சூலத்திற்குத்தி மேல் நோக்கிப் பிடித்துக்கொண்டு கூத்தாடிக் கொண்டே காஞ்சிக்குவந்துநிற்ப அந்தகன் சூலாயுதத்திலிருந்த வண்ணம் ஸ்தோத்திரம்செய்து வேண்ட வைரவக்கடவுள் இரக்கமுற்றவராய் அவனைச் சூலாயுதத்தினின்றும் இறக்கி நல்லறிவு தோன்றுமாறு அநுக்கிரகம் செய்தனர். செய்யவே அவனும் சாந்தகுணமுடையவனாய் முக்தியை வேண்டிப் பூஜித்த பெருமானர்.

## அம்பிகாவனேச்வரர் (அம்பி என்னும் கிராமம்)

காமாக்ஷிதேவியாரது தோழியருட்சிறந்த அம்பிகைமுதலிய தோழியர் தேவியாரது கட்டளையின்படி நந்தவனம் வைத்து அதில் தேவிமகிழும் வண்ணம் கோட்டினங்களினும் கொடியினங்களினும் நிலத்திலுண்டாகும் இனங்களினும் நீரிலுண்டாகும் இனங்களினும் உண்டாகும் மலரினங்களெல்லாம் எக்காலத்தும் உண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்து ஆம்ரநாயகனை வாழ்த்தி அந்நந்தவனத்திற்றனே சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து அம்பிகாவனேச்வரரெனத் திருநாமமிட்டுப் பூஜித்தனர்.

(பெரியகாஞ்சிபுரத்திற்கு மேற்கு)

## * பிரவாளேச்வரர் திருமாற்பேறு

பிருந்தை என்பவளைத்தன் மனைபாட்டியாகக் கொண்டு சுகித்து வாழவெண்ணி அவளது கணவனுகியஜலந்தராசுரன் அழிந்த நாளில் அவளைக்கூடிய திருமால் அவ்வசுரனைக்கொன்றஅரியசக்கராயுதத்தைச் சிவபரஞ்சுடரிடத்திற் பெறுதற்கு இந்த க்ஷேத்திரத்தில் வந்து இச்சிவலிங்கமூர்த்தியைக்கண்டுதரிசிக்கும்பொழுது சிவலிங்கமூர்த்தியின்கண் காமாக்ஷிதேவியார் தமது திருக்கரத்தாற் றடவிப் பவளம் போல் சிவந்து போன திருமேனியையும், நான்கு திக்குகளிலும் நான்கு திருமுகங்களையும் அம்முகங்கள்

---

*இக்குறியிட்ட க்ஷேத்திரங்கள் தேவாரம் பெற்றுள்ளவை.

தோறும் ஆயிரமாக அருந்தவரெல்லாம் நின்றுபோற்றும் காக்ஷீயையும் இறைவன்காட்டி நிற்பத்திருமால் அத்திருக்கோலத்தைக் காணும்தோறும் அதிசயித்துக் கருணையை வியந்து இந்தமூர்த்திதான் நாம் வேண்டியாங்களிக்கவல்லனென்றெண்ணி நாடோறும் ஆயிரம் மலர்கள் கொண்டர்ச்சித்து வந்தனர். பிராட்டியார் வருடச்சிவந்த பவள மேனியைக்காட்டியதால் பிரவாளேச்வரரென்னும் திருநாமம்வந்தது. ஈதன்றியும் சாதரூபர், மணிகண்டர், தயாநிதியார், பவள மாலையார், வாட்டந்தவிர்த்தார், சாகீசனர் திருமாற்குப் பேறளித்தார் என்னும் நாமங்களையும் உடையார். ஆக இவருக்குரிய நாமங்கள் பிரவாளேச்வரர் முதலாக எட்டு. (படுவூர் ஸ்டேஷனுக்குச் சமீபம்.)

பரசுராமேச்வரர் (திருமாற்பேற்றுக்குக்கிழக்கு)

ஜமதக்னி முனிவருக்குப்பிறந்த பரசுராமர்என்னும் திருமால் கார்த்தவீரியனெனபவனுல் தன்தாதை இறந்துபோனதைக்கண்டு மனம் புழுங்கி க்ஷத்திரிய வம்சத்தைநாசஞ்செய்யவெண்ணி அவ்வாற்றல் தனக்குண்டாகப் பூஜித்தனர்.

ரேணுகேச்வரர் (பரசுராமேச்வாருக்குத்தெற்கு)

'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்னும் நீதியை எண்ணிய தன் மகனுகிய பரசுராமரால் கொல்லப்பட்ட இரேணுகை மீண்டும் தன் மகனுலேயே எழுப்பப்பட்ட பின்னர் மகளீர்கற்பு நிலையுடையராயின் அவர் உலகினரால் தொழும் தெய்வமாவரென்னும் புகழை நாம் வெளியாக்கல் வேண்டுமென்றெண்ணி இங்கு வந்து தன் பெயரால் பூஜித்தனர்.

குரூரேச்வரர் திருமாற்பேற்றுக்குத்தெற்கு. கூர்ம கிராமம்.

குரூரரென்னும் முனிவர் ஈசானலிங்கம், தத்புருஷலிங்கம், அகோரலிங்கம், வாமதேவலிங்கம் சத்தியோசாதலிங்கம் என்னும் பஞ்சப்பிரம நாமங்களால் ஐந்து லிங்கங்களைப்பிரதிஷ்டைசெய்து சிறந்த மலர்களைக்கொண்டு ஸ்ரீ பஞ்சாக்ஷாத்தாலர்ச்சனை செய்து வந்து சிவசாயுஜ்யத்தைப் பெற்றனர்.

திருமாற்பேற்றுக்குச் சமீபத்தில் கோவிந்தபாடி என்னும் ஓர் க்ஷேத்திரமுண்டு. அவ்விடத்தில் கோவிந்தராகிய திருமாலுக்

கும் ஸ்வேதர் மூலர் லகுளர் முதலாகச் சொல்லப்பட்ட யோகா சார்யர்களுக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பரமாசாரியராய் எழுந்தருளியிருந்து வேத வேதாந்தங்களைப் பாடமுறையாகச்சொல்லியருளினர். அதனால் கோவிந்தபாடி எனப் பெயர் பெற்றது. இவ்விடத்தில் தெய்வத்தன்மையுடையகிளியொன்றிருக்கின்றதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்விடந்தொட்டு ஏகாம்பரநாதராலயத்துக்குவடக்கிலுள்ள பருதிக்குளம் வரையில் மேற்சொன்ன யோகாசாரியரெல்லாம் தனித்தனியே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜித்திருக்கின்றனர்.

காஞ்சி க்ஷேத்திரமஞ்சரி முற்றிற்று.

# இந்தக்ஷேத்திரத்தில் முக்கியமான சில அற்புதங்களுள.

## அவை வருமாறு.

முக்திமண்டபம் மூன்று, அவற்றுள் ஒன்று சர்வதீர்த்தக்கரையிலிருக்கின்றது. ஒன்று முக்தீச்வரர்கோயிலிலிருக்கின்றது. ஒன்று துலுக்கர்களது தர்க்காவாயிருக்கின்றது. இவையன்றி கங்கைகொண்டான் மண்டபத்துக்கு நிருதி மூலையில் ஓர் மண்டபமிருக்கின்றது. அதற்குப் பரமானந்த மண்டபமெனப்பெயர். அதுமுன் ஏகாம்பரநாதருக்கு வாகனமண்டபமாயிருந்து, இப்பொழுது மசூதியாயிருக்கின்றது. இதுவுமன்றிச் சுப்பிரமணிய க்ஷேத்திரமாகிய குமரகோட்டத்திற்குத் தெற்கில் ஓர் நடபாவியுண்டென்றும், அதில் ஆயிரம் இதழ்களோடு கூடிய ஓர் தாமரை மலருண்டென்றும், அதில் முருகக்கடவுள் பாலராய் விளையாடிக்கொண்டிருக்கின்றாரென்றும், அவரது ஆலயத்தில் சுவர்ணவிருக்ஷமிருப்பதென்றும், தெய்வத்தன்மையுள்ள மயிலொன்றிருப்பதென்றும், காமாக்ஷிதேவியாரது ஆலயத்தில் ஜண்பக விருக்ஷமிருப்பதென்றும், மாவடியில் கபோதப்பறவையும் நாகணவாய்ப் பறவையும் இருப்பதென்றும், திருமாகறலில் மாடப்புறா விருப்பதென்றும், கோனேரிக்குப்பத்திலுள்ள சக்கரதீர்த்தத்தில் சக்கரவாளப்பக்ஷியிருப்பதென்றும், இன்னுமிவை போன்ற பலவற்புதங்களிருப்பனவென்றும், இரட்டையருலா முதலிய பல நூல்களில் நன்றாய்க் கூறப்பட்டுள்ளன. கல்விமண்டபம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் சரஸ்வதி மண்டபமென்றும் கணக்கறி மண்டபம் இரட்டை மண்டபமென்று வழங்கிவருகின்றன. கீழண்டை ராஜவீதியில் ஈசான்யத்தில் துலாபாரதான மண்டபம் என்று ஒன்றுளது.

காஞ்சீமஹிமையில் வரும் அம்சம் என்பதின் அளவு 160 அம்சம்கொண்டது 1 யோஜனை. ஒரு யோஜனைக்கு மைல் 10 ஒரு மைலுக்கு அம்சம் 16.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## விகடசக்ரவிநாயகர் ஸ்தோத்திரம்.

स्वकटजातमदाश्रितबंभर मकटकूजितनादितदिक्तटम् ।
निकटवासिनमेकरसालिनो विकटचक्रविनायकमाश्रये ॥ १ ॥

मातामहमहाशैलं महस्तदापितामहम् ।
कारणं जगतां वन्दे कण्ठादुपरि वारणम् ॥ २ ॥

## ஆம்ரநாத ஸ்தோத்திரம்.

ऐश्वर्यं परमं तत्वमादिमध्यांतवर्जितम् ।
आधारं सर्वलोकानामनाधारमविक्रियम् ॥

अनन्तानन्दबोधाम्बुनिधिमद्भुतविक्रमम् ।
अम्बिकापतिमीशानमनिशं प्रणमाम्यहम् ॥ २ ॥

सुप्रसन्नं महादेव्या नित्यकल्याणसुन्दरम् ।
महाप्रलयपापघ्नं रसालेशमहं भजे ॥ ३ ॥

उमालिंगनसंक्रान्तकुचकङ्कणमुद्रितम् ।
लिंगमेकाम्रनाथस्य सैकतं समुपास्महे ॥ ४ ॥

## த்ரிபுர சுந்தரீ ஸ்தோத்ரம்.

इक्षुकोदण्डपुष्पेषु पाशांकुशलसत्कराम् ।
उद्यत्सूर्यनिभां वन्दे महात्रिपुरसुन्दरीम् ॥ १ ॥

विश्वकारणनेत्राढ्यां महात्रिपुरसुन्दरीम् ।
बन्धकासुरसंहर्त्रीं कामाक्षीं तामहं भजे ॥ २ ॥

स्वर्णाङ्गीं रत्नभूषाढ्यां शुकहस्तां शुचिस्मिताम् ।
कांचीनिवासिनीं वन्दे कामाक्षीं कामितार्थदाम् ॥ ३ ॥

ஆம்ரவ்ருக்ஷ ஸ்தோத்திரம்.

शिवबीजसमुद्भूतं वेदशाखाभिरुज्ज्वलम् ।
मृकण्डुतनयाधारं रसालं तं नमाम्यहम् ॥

காமகோடி பீட ஸ்தோத்திரம்.

जगत्कामकलाकारं नाभिस्थानं भुवः परम् ।
पदपद्मस्य कामाक्ष्याः महापीठमुपास्महे ॥

காமகோடிமஹாபில ஸ்தோத்திரம்.

गायत्रीमण्टपाधारं नाभिस्थानं भुवः परम् ।
पुरुषार्थप्रदं शम्भोर्बिलप्रान्तं नमाम्यहम् ॥

ஸர்வதீர்த்த ஸ்தோத்திரம்.

हररोमसमुद्भूतसर्वतीर्थसमन्वयात् ।
सर्वतीर्थाह्वयं वन्दे कंपायाः पूरितं सरः ॥

வேகவதி நதி ஸ்தோத்திரம்.

नमस्ते ब्रह्मपत्नि त्वां सरिद्रूपां सरस्वतीम् ।
सर्वपापप्रशमनीं वेगवत्यभिधान्विताम् ॥

---